ந.க.எண்.அ16/2301/2022 நாள்: 12.07.2022

**தூத்துக்குடி மாநகராட்சி**

**ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு**

**தூத்துக்குடி மாமன்றத்தின் 08.04.2022 ம் தேதிய 86 ஆம் எண் தீர்மானம்**

தூத்துக்குடி மாநகராட்சி கிழக்கு மண்டல முத்துநகர் கடற்கரை பூங்காவில் சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள 10 கடைகளுக்கு கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துகளையும், உரிமைகளையும் 2022ம் ஆண்டு ஒப்படைக்கும் நாள் முதல் 3 ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் பெறும் பாத்தியத்தை இம்மாநகராட்சி ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் 25.07.2022 மாலை 3.00 மணி அளவில் அல்லது ஒத்தி வைக்கப்படும் நாட்களில் தூத்துக்குடி மாநகராட்சி மைய அலுவலகத்தில் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்படும். அத்துடன் அனைத்து இனங்களுக்கும் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஏலம் நடைபெறும் நாளில் மாலை 2.00 மணி முதல் 3.00 மணி வரை மாநகராட்சி அலுவலகத்தில் ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் பெற்று கொள்ளப்படும். ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் ஏலம் நடைபெறுவதற்கு முந்தைய தினம் அல்லது முந்தைய வேலை நாளில் மாலை 5.00 மணிக்குள் சம்பந்தப்பட்ட ஏலத்திற்கு செலுத்த வேண்டிய காப்புத் தொகையை மாநகராட்சி அலுவலகத்தில் தேசியமயமாக்கப்பட்ட வங்கி வரைவோலையாக செலுத்தி இரசீது பெற்றுக்கொள்ள வேண்டும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சம்பந்தப்பட்ட இனத்திற்கான ஏலம் முடிவுற்றதும் வருகை தந்துள்ள ஏலதாரர்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். ஏல நிபந்தனைகளிலோ மற்றும் ஏதாவது மாறுதல் ஏற்படுமாயின் அவைகள் ஏலம் நடைபெறும் சமயத்தில் தெரிவிக்கப்படும். அந்த மாறுதல்களை இந்த ஏல அறிக்கையின் ஒரு பாகமாக கருதப்படும். ஒவ்வொரு கடைக்கும் ஏலத்திற்கு தனி,தனியாக காப்புத் தொகை செலுத்தப்பட வேண்டும். ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களின் உயர்ந்தபட்ச கேள்வியானது மாமன்றத்தால் உறுதி செய்யப்பட்ட பின்னர் சம்பந்தப்பட்ட நபர்கள் முன்பண வைப்புத் தொகையினை உடனடியாக மாநகராட்சி அலுவலகத்தில் செலுத்த வேண்டும். மேலும் இதர விபரங்களை அலுவலக வேலை நாட்களில் மைய அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேரில் கேட்டு தெரிந்துக் கொள்ளலாம்.

<u>**உரிமம் இனங்கள் விபரம்**</u>

| வ. எண். | ஏலம் இனம்/ அமைவிடம் | கடை எண் | ஆரம்ப ஏலம்/ஒப்பந்தப்புள்ளி மாத வாடகை கேள்வித்தொகை ரூ. | காப்பு வைப்புத் தொகை ரூ. | உரிமம் காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் முத்துநகர் கடற்கரை பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள கடைகள் | 1 | 9,000/- | 1,00,000/- | ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலம் |
| 2 | | 2 | 9,000/- | 1,00,000/- | |
| 3 | | 3 | 9,000/- | 1,00,000/- | |
| 4 | | 4 | 9,000/- | 1,00,000/- | |
| 5 | | 5 | 9,000/- | 1,00,000/- | |
| 6 | | 6 | 9,000/- | 1,00,000/- | |
| 7 | | 7 | 9,000/- | 1,00,000/- | |
| 8 | | 8 | 9,000/- | 1,00,000/- | |
| 9 | | 9 | 9,000/- | 1,00,000/- | |
| 10 | | 10 | 9,000/- | 1,00,000/- | |

ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி குறித்தான ஏதேனும் திருத்தங்கள்/ மாறுதல்கள் இருப்பின் தூத்துக்குடி மாநகராட்சி மைய அலுவலகம் மற்றும் நான்கு மண்டல அலுவலக விளம்பரம் பலகையில் அறிவிப்பு வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

<u>குறிப்பு:</u>

1. ஏல பொது நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாட்டுகளுக்கு உட்பட்டமையாகும்.
2. ஏல/ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பம் படிவம் ரூ.500/— செலுத்தி மைய அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
3. முன் வைப்புத்தொகை (12 மாத வாடகை) உயர்ந்தபட்ச ஏலம்/ஒப்பந்தப்புள்ளி தொகை உறுதி செய்யப்பட்டவுடன் உடனடியாக செலுத்த வேண்டும்.

(ஒம்)தி. சாருஸ்ரீ.இ.ஆ.ப.,
ஆணையர்
தூத்துக்குடி மாநகராட்சி

/உத்தரவுப்படி/

உதவி ஆணையர்
தூத்துக்குடி மாநகராட்சி